இடங்களில் உள்ள ஏர்க் கண்டிஷன் மெஷின்களையாவது உடனடியாக இந்த மெஷின்களைப் பழுது நீக்கம் செய்யும்வரை ஷிப்ட் செய்து வைப்பாரா என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: தலைவர் அவர்களே, ஆங்காங்கே அந்தந்த மருத்துவமனைகளிலே இருக்கின்ற மெஷின்களை மாற்று ஏற்பாடாக பெரும்பாலும் மாற்றுவது கிடையாது. ஏனென்றால் அந்தந்த மருத்துவ மனைகளிலே, அங்கேயே அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே மற்ற பணிகள் அங்கே பாதிக்கப்படக்கூடாது என்ற காரணத்தினாலும் அதை மாறறுவது என்பது இயலாது. ஏற்கெனவே சரியான முறையிலே அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. அங்கே இருக்கின்ற அதிகாரிகள் உடனடியாக அதைச் செய்து முடிப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

8. அறிக்கைகள் அளித்தல்

மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. எஸ். ஜெயக்குமார், மனுக்கள் குழுவின் தலைவர்.

திரு. எஸ். ஜெயக்குமார்: பேரவைத் தலைவர் அவர்களே, *1994–95*ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவின் *35* மற்றும் *36*–வது அறிக்கைகளைப் பேரவைக்கு அளிப்பதில் பெருமை கொள்கிறேன்.

முற்பகல் *10–55*

9. வரவு-செலவுத் திட்டம், 1995-96, பொது விவாதம்-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1995–96* ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதமும், பதிலுரையும். திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1995–96* ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது கருத்துக்களைக்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS